# BHARATHIAR UNIVERSITY, COIMBATORE 641 046
# DIPLOMA IN PARAIYATTAKKALAI
# (பறையாட்டக்கலை – பட்டயம்)
## (For the CCCC students admitted from the academic year 2016-17 onwards)

## SCHEME OF EXAMINATIONS

| S.NO | SUBJECT | Examinations | |
|---|---|---|---|
| | | Dur. Hrs. | MARKS |
| 1 | தமிழக நாட்டுப்புற ஆட்டக்கலைகள் | 3 | 100 |
| 2 | இசை வகைகளும் இசைக் கருவிகளும் | 3 | 100 |
| 3 | பறையின் தோற்றமும் இலக்கணமும் | 3 | 100 |
| 4 | பறையாட்டக்கலை | 3 | 100 |
| 5 | அடவு முறைகள் கற்பித்தல் - பயிற்சி முறை | 3 | 100 |
| 6 | பறை வாசிப்பு – பயிற்சி முறை | 3 | 100 |
| | மொத்தம் | | 600 |

**COURSE DURATION - ONE YEAR**

**நோக்கம்:**

ஒலியையும் ஓசையையும் காலக்கட்டுக்குள் கொண்டு நுட்பமான இசையினை வழங்கும் கற்றல் மிக்கது பறையிசைக் கருவியாகும். இது தமிழரின் தொன்மை அடையாளத் தாளக் கருவியாகவும் தொழிற் கலையாகவும் மற்றும் அறிவிப்புக் கருவியாகவும் விளங்குகின்ற பான்மையினை மாணவர்கள் அறியச் செய்தல் - சங்க காலத்தைப் போல 'பறை' (தப்பு) என்ற தமிழரின் இசைக் கருவிக்குச் சமூக மதிப்புகள் வழங்கும் இக்காலத்தில் இக்கருவி குறித்தும் இசைமுறைகள், ஆட்டங்கள் ஆகியவை குறித்தும் மாணவர்கள் அறியச் செய்தல் - இக்கருவியை இசைக்கும் அளவிற்கு மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல்.

**பயிற்றுவிக்கும் முறை:**

நாட்டுப்புற இசைக் கருவி – கருவிகளின் மரபுவழியிலான வாசிப்பு முறையும் மாணவர்களின் கருவி இசைக் கலைத்திறன்களை வெளிக்கொணரும் வகையில் பயிற்றுவித்தல், மரபு இசைக் கருவிகளை நவீன வகையிலான அணுகுமுறைகளோடு பயிற்றுவித்தல்.

## தாள் : 1 – தமிழக நாட்டுப்புற ஆட்டக்கலைகள்

அலகு 1: தமிழக நாட்டுப்புறக் கலைகள் - அறிமுகம்:
ஆட்டக்கலைகள் - கூத்துக்கலைகள் - திருவிழாக்கொண்டாட்டக் கலைகள் வட்டாரங்கள் சார்ந்த கலைகள் - சடங்குக்கலைகள்.

அலகு 2: ஆட்டவகைகள்:
ஆண்கள் ஆடும் ஆட்டங்கள் - பெண்கள் ஆடும் ஆட்டங்கள் - ஆண் பெண் இணைந்து ஆடும் ஆட்டங்கள் - பாட்டு இடம்பெறும் ஆட்டஙகள் - பாட்டு, வசனம் உள்ள ஆட்டங்கள்.

அலகு 3: வட்டார தன்மைகளும் இனக்குழு நடனங்களும்
தமிழகக் கிழக்கு – குறவன் குறத்தி ஆட்டம், கரகாட்டம் (தஞ்சை) – மேற்கு – துடும்பு ஆட்டம், ஜிக் ஆட்டம், உடுக்கடிக் கதை ஆட்டம் - வடக்கு – கொக்கலிக்கட்டை ஆட்டம் - தெற்கு – கழியலாட்டம் இனக்குழு நடனம் - மலையினமக்கள் ஆட்டங்கள் (தோடர், கோத்தார், படுகர்) – தேவராட்டம் - பறையாட்டம்.

அலகு 4: ஆட்டவடிவங்களும் கூறுகளும்
அடவுகள் - குத்தடவு, எத்தடவு - ஆட்டமுறை: நின்றால், வீழ்ந்தாடல், அமர்ந்தாடல், குதித்தாடல் - ஆட்டவடிவங்கள்: வட்ட வடிவம் (கும்மீ) – நேர்கோட்டு வடிவம் (ஒயில், தேவராட்டம்).

அலகு 5: சடங்குமுறை ஆட்டங்கள் - தொழில் முறை ஆட்டங்கள்
விழா, சாமி, நம்பிக்கைசார் நடனங்கள், கூலி இல்லா ஆட்டங்கள், கூலி பேசி ஆடும் ஆட்டங்கள் - நேரம் - வணிக நோக்குக்கான உத்திமுறைகள்.

பார்வை நூல்கள்

1. நாட்டுப்புற கலைகள், முனைவர் ஆறு. இராமநாதன், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2001.
2. நாட்டுப்புற ஆட்டப்பாடல்கள், கே.ஏ. குணசேகரன், என்.சி.பி.எச் (பி)லிட், சென்னை.
3. நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும், கே.ஏ. குணசேகரன், என்.சி.பி.எச் (பி) லிட் சென்னை, 1992.
4. தமிழக நாட்டுப்புற ஆட்டக்கலைகள், முனைவர் கு. முருகேசன், தேவி பதிப்பகம், சென்னை, 1989.

5. குறவன் குறத்தி ஆட்டம், கே.ஏ. குணசேகரன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2005.
6. நீலகிரி மலையின மக்கள் ஆட்டங்கள் (தோடர், கோத்தார், இருளர்) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. தமிழகத்தில் தெருக்கூத்து, முனைவர் அ. அறிவுநம்பி, அமுதன் நூலகம், காரைக்குடி, 1986.
8. அடவுகட்டி ஆட, வின்சென்ட். பெ. வில்சன், களரி வெளியீட்டகம், 2003.
9. தமிழர் கூத்துகள், ஜான் ஆசிர்வாதம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.
10. பறை இசைக் கருவி – ஓர் ஆய்வு, முனைவர் மு. வளர்மதி, திருமகள் நிலையம், சென்னை, 1999.

## தாள் : 2 – இசை வகைகளும் இசைக் கருவிகளும்

அலகு 1: தமிழக நாட்டுப்புற இசையின் பொதுத் தன்மைகள்

தன்னானே …… தில்லேலே – போன்ற இசையமைப்புகள் தமிழகப் பகுதிகளை அடையாளப்படுத்தி அமைவன – பின்பாட்டு முறைகள் அமைந்து தனித்துவ அடையாளம் காட்டி நிற்றல் - இசைவகைகள்: சிந்து, தெம்மாங்கு, கூத்து, நையாண்டி போன்றவைகளால் அடையாளப்படுத்தி அமையும்.

அலகு 2: இசைப்புமுறையும் பின்பாட்டுமுறையும்

உரத்தன்மை (குரல்வழி, இசைக்கருவிகள் வழி) – தோலிசைக்கருவிகள் - வாசிப்பு முறையில் உள்ள 10 வகை நடைகளைச் சொற்கட்டுவழி பதிவு செய்தல் - வாசிப்பு குச்சிகள்: தட்டைக் குச்சி, உருண்டைக் குச்சி – இரு சமஅளவுக் கோல்கள் (துடும்பு ஆட்டம்) தவில் (உருண்டை, தட்டைக் குச்சி) இசைக்கருவி செய்முறை அறிதல் - செப்பனிடும்முறை அறிவு - வாசிப்பு (இயக்குதல்) முறை அறிவு - பின்பாட்டு: சொல்லி எடுப்பு பின்பாட்டு, ஓசை அலம்புப் பின்பாட்டு, இசைக்குறிப்புப் பின்பாட்டு, அடியெடுப்புப் பின்பாட்டு.

அலகு 3: இசை வகைகள்

தெம்மாங்கு இசை வகைகள் - தெற்கத்தித் தெம்மாங்கு இழுவைத்தெம்மாங்கு – சோலைமலைத் தெம்மாங்கு டப்பாத்தெம்மாங்கு சிந்து இசை: கும்மிச் சிந்து, நொண்டிச் சிந்து, கொலைச்சிந்து, வளையல் சிந்து, நையாண்டி இசை – தெக்கத்தி நையாண்டி, சிவகங்கை நையாண்டி, விளம்ப நையாண்டி.

அலகு 4: இசைக் கருவிகள்

தோலிசைக் கருவிகள் (பாறை, பம்பை) – துளை இசைக் கருவிகள் (சத்தக் குழாய்) – நரம்பிசைக் கருவிகள் (வில்லிசை, உடுக்கை) – துணை இசைக் கருவிகள் (கஞ்சக் கருவி) – (சால்ரா, சிப்பலாக்கட்டை, மணிக்கச்சம்) – குரலிசை (வெண்கலக்குரல், தகரக்குரல்)

அலகு 5: இசைக் கலைஞர், சமூகம்

இசை, இனத்தின் அடையாளம் - எழுதயிலாத மொழி (இசையாகும்) இசைக் கலைஞர் - பரம்பரை பல இனத்தார் வருகை, கலைக்குடும்பம், சமூக அங்கீகாரம் பெறல், திறமை வழி அடையாளம் பெறல், அரசு அங்கீகாரம், ஊடகப் பங்கேற்பு - கலைஞர் - சங்கங்களில் உரிமை.

பார்வை நூல்கள்


1. நாட்டுப்புற இசைக்கலை, முனைவர் கே.ஏ. குணசேகரன், வைரமணி பதிப்பகம், புதுக்கோட்டை, 1990.
2. சந்தனத்தீ...... தஞ்சை மாவட்ட நாட்டுப்புற பாடல்கள், முனைவர் த. கனகசபை, பொன்னி, சென்கை, 2003.
3. நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும், கே.ஏ. குணசேகரன், என்.சி.பி.எச் (பி) லிட் சென்னை, 1992.
4. சிந்துப்பாவியல், முனைவர் இரா. திருமுருகன், பாவலர் பண்ணை, புதுச்சேரி, 1994.
5. தமிழ்க்கவிதைகளில் சந்த அமைப்பு, டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன், வசந்தா பதிப்பகம், சென்னை, 2006
6. சங்கரதாஸ் சுவாமிகளின சந்தங்கள் - ஓர் ஆய்வு, முனைவர் அரிமளம் சு. பத்மநாபன், இசைத்தென்றல், புதுச்சேரி, 2002.
7. தமிழில் கொலைச்சிந்து, முனைவர் அரு. மருததுரை, அருணா வெளியீடு, முசிறி, 1991.
8. பறை இசைக் கருவி – ஓர் ஆய்வு, முனைவர் மு. வளர்மதி, திருமகள் நிலையம், சென்னை, 1999
9. இந்திய நாடும் மக்களும் - இசைக் கருவிகள், பி. சைத்தன்ய தேவ (தமிழில்) டி.எஸ். பார்த்தசாரதி, நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி, 1994.
10. தமிழர் தோற்கருவிகள், ஆர். ஆளவந்தார், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981.
11. இந்திய இசைக் கருவூலம், முனைவர் கே.ஏ.பக்கிரிசாமி பாரதி, குசேலர் பதிப்பகம், சென்னை, 2002.

## தாள் : 3 - பறையின் தோற்றமும் இலக்கணமும்

அலகு 1:

தமிழர் தோற்கருவிகள் : அறிமுகம் - இசை - இசைக்கருவிகள் - தோற்கருவிகளுக்கு ஏற்ற தோல்கள் : போர்க்கும் தோல்கள் - கட்டும் வார் - தோலை போர்த்திய முறை - தோற்கருவிகளுக்கு ஏற்ற மரங்கள்

அலகு 2:

பறை : பறையின் தோற்றம் - பறை பொதுப்பெயர் - பறை இலக்கியச் சொல்வழக்கு - பறை கருப்பொருள் - பறை குறிக்கும் சொற்கள் - பறை நிலை

அலகு 3:

தோற்கருவி : இசைக்கருவி இலக்கணம் - தன்மைக்கேற்ப கருவிகளின் வகைகள் : வன்மை கருவி - மென்மை கருவி - சமக்கருவி -தலைக்கருவி - கடைக்கருவி - வீரக்கருவி

அலகு 4:

பறை வகைகள் : பறையின் பெயர்கள் - வாசிக்கும் முறைகள் - இலக்கியக் குறிப்புகள் - அளவுகள்

அலகு 5:

வாழ்விழந்து வரும் இசைக்கருவிகள் : தோற்கருவிகளின் பட்டியல் - இசைக்கும் இடங்கள் - இசைக்கலைஞர்கள் - இசைக்கருவிகளின் உற்பத்தித் திறன்

**மேற்கோள் நூல்கள்:**

1.தமிழர் தோற்கருவிகள் - ஆர்.ஆளவந்தார் ,உலகத் தமிழாராச்சி நிறுவனம், சென்னை.
2.பறை இசைக்கருவி - ஓர் ஆய்வு - முனைவர் மு.வளர்மதி ,திருமகள் நிலையம்.
3.வாழ்விழந்து வரும் கிராமிய இசைக்கருவிகள் - வெ.நீல கண்டன்.

## தாள் : 4 – பறையாட்டக் கலை

அலகு 1: பறை வரலாறு (இலக்கியப் பதிவுகள்)
பண்டைய பயன்பாடு – இன்றைய நிலை (தமிழகத்திலும் இந்தியாவிலும்)

அலகு 2: செய்முறை, செப்பனிடும் முறை, இயக்கமுறை.

அலகு 3: சொற்கட்டு (வாசிப்பு முறை மொத்தம்) மஞ்சுவிரட்டுக்கான நடை: இன்பம் (விழா, திருமணம்), துன்பம் (சாவு) கெண்டாட்டம் - சடங்கு நிகழ்வு, ஊர்வலம்.

அலகு 4: பறை வாசிப்புக்கும் ஆட்ட அடவுமுறைகளுக்கான இயைபுநிலை – தஞ்சாவூர், மதுரை எனப் பகுதிவாரியான பாணிகள், ஆண்கள் பாணி – பெண்கள் பாணி, பறை இசையுடன் பிற இசைக் கருவிகளின் இணைவு நிலை.

அலகு 5: பறையும் சமூக மதிப்பு நிலையும்
ஆண்களிடமிருந்து பெண்களிடமும், அரசியல் ஊர்வலம், சென்னை சங்கமம், சமூக விடுதலைக்கான போர்பறை, மேலைநாடுகளில் பறையாட்டம், சாதிக்கான அடையாளங்கள் மாறிவரல்.

பார்வை நூல்கள்

1. இந்திய நாடும் மக்களும் - இசைக் கருவிகள, பி. சைதன்யதேவ (தமிழில்) டி.எஸ். பார்த்தசாரதி, நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி, 1994.
2. அருண்மொழி (ஆய்வுத்தொகுதி) (கட்டுரை) இராஜதாஜீச்வரத்தில் பறையறைவி, இரா. நாகசாமி, தமிழநாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1988.
3. நாட்டுப்புற இசைக்கலை, முனைவர் கே.ஏ. குணசேகரன், வைரமணி பதிப்பகம், புதுக்கோட்டை, 1990
4. பறை இசைக் கருவி – ஓர் ஆய்வு, முனைவர் மு. வளர்மதி, திருமகள் நிலையம், சென்னை, 1999.

## தாள் : 5 – அடவுமுறைகள் கற்பித்தல் - பயிற்சிமுறை

அலகு 1: காவடிவைப்புமுறை காலமுறைப்படி (தாளம்) காலடிவைப்பு முறைகள்

அலகு 2: சொற்கட்டுக்களை வாய்வழிச் சொல்லியவாறு காலடிவைப்புச் செய்து பயிற்சி மேற்கொள்ளுதல்.

அலகு 3: பறை இசைக்கருவி வாசிப்புக்கேற்ப காலடிவைப்புச் செய்தாடல்.

அலகு 4: உடைஒப்பனை மற்றும் கால்மணிக்கச்சத்ததுடன் ஆசிரியரின்றி ஆட்டப் பயிற்சி மேற்கொள்ளல்.

அலகு 5: இன்ப துன்ப நிகழ்வுகள், ஊர்வலம், இன்னபிற நிகழ்வுகளுக்கு ஏற்ப வாசித்து ஆடப் பயிற்சி மேற்கொள்ளுதல்.

## தாள் : 6 – பறைவாசிப்பு - பயிற்சிமுறை

அலகு 1: பறையில் ஒண்ணாங்காலம் ரெண்டாங்காலம் என இரு குச்சிகளைக் கொண்டு வாசிக்கக் கற்றுக்கொள்ளல்.

அலகு 2: சொற்கட்டுகளைச் சொல்லிப் பல நிலைகளில் வளர்த்துச் செல்ல வாய்ப்பாட்டாகக் கற்றுக்கொள்ளல்.

அலகு 3: சொற்கட்டுச் சொல்லச்சொல்ல ஒண்ணாங்காலம் ரெண்டாங்காலம் என முறையே சொல்லச்சொல்லி குச்சிகளில் வாசித்துப் பழகுதல்.

அலகு 4: ஒருவர் ஆசிரியராக அமைந்து பிறரை பறை வாசிக்கச் செய்யப் பயிற்சி எடுத்தல். (இப்பயிற்சி முறையில் பங்குபெறும் தலைமையேற்றுப் பயிற்சிபெற மேற்கொள்ள வேண்டும்.)

அலகு 5: வெவ்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்ப (சாவுப்பறை, எழுச்சிப்பறை) வாசித்துப் (பறைவாசிப்பு குறியீடு) பயிற்சி மேற்கொள்ளல்.